642

ஸ்ரீ:

ஸ்ரீமதேராமாநுஜாய நம:

# செந்தாமரையாள் மாலை.

திருவல்லிக்கேணித்
தமிழ்ச்சங்க வெளியீடு, 40.

சங்கக் காரியாலயம்:
ஆநந்தபிருந்தாவநம்,
மௌனசுவாமிகள் மடத்துத் தெரு,
அம்பத்தூர்.

7-12-1952.

Q22:417
N52
83163

ஸ்ரீ:

# திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கப் பிரசுரம்.

| இலக்கம். | வெளியீட்டின் பெயர். | வள்ளலார் பெயர். |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் வைபவம். | ஸ்ரீமான் வி. யன். சிங்காரவேலு முதலியார் அவர்கள். |
| 3. | மறைமுடித் தேசிகனர். | ஸ்ரீமான் சுந்தரசேகர நாயக்கர் அவர்கள். |
| 4. | மணவாள மாமுனிகள். | ஸ்ரீமான் ஸி. நரஸிம்மாசாரியார் அவர்கள். |
| 5. | அழகர் மாலே. | நற்றமிழன்பர்கள். |
| 6. | வேதாந்த தேசிக ரூசல். | ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்கார் அவர்கள். |
| 9. | கம்பர் மாலே. | ராவ்ஸாஹெப். ஆர். ராமஸ்வாமி அய்யங்கார் அவர்கள். |
| 10. | பரிமுக மாலே. | ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸராகவாசாரியார் அவர்கள். |
| 11. | ஸ்ரீ ஆண்டாள் மாலே. | ஸ்ரீமான் பி. எஸ். திருமலே அய்யங்கார் அவர்கள். |
| 12. | ஸ்ரீ பார்த்தசாரதி மாலே. | ராவ்பஹதூர் கே. ஆர். ராமாநுஜம் அவர்கள். |
| 13. | திருவருண் மாலே. (33) | ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்கார் அவர்கள். |
| 14. | தூப்புல் வள்ளல் பழமொழிச் சிறப்பு. (34) | ப. ரெ. திருமலே அய்யங்கார். |
| 17. | புகழ் மாலே. | தமிழன்பர். |
| 18. | கம்பர் தருங் கண்ணன். | ஸ்ரீமான் பி. சேஷாத்திரி அய்யங்கார் அவர்கள். |
| 19. | முக்கோற்பகவர். | ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸகோபாலய்யங்கார் அவர்கள். |
| 20. | ஸ்ரீ வீரராகவ மாலே. | ஸ்ரீமான் ரா. கிருஷ்ணய்யங்கார் அவர்கள். |
| 21. | திருமாமகள் மாலே. | திருப்புகழ்மணி பிரும்மஸ்ரீ டி. எம். கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்கள். |
| 22. | திருநரசிங்கர் மாலே. | ஸ்ரீமான் கமலாபுரம் ஆர். ராமஸ்வாமி அய்யங்கார் அவர்கள் திருத்தேவியார் ஸ்ரீரங்கநாயகி அம்மாள். |
| 23. | அழகியசிங்கர் மாலே. | ஸ்ரீமான் எம். பி. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் அவர்கள். |

| இலக்கம். | வெளியீட்டின் பெயர். | வள்ளலார் பெயர். |
|---|---|---|
| 24. | பொய்கையார் மாலை. | ஸ்ரீமான் மங்கலம் இராமாநுஜய்யங்கார் அவர்கள். |
| 25. | ஸ்ரீ ஆண்டாள் சந்திரகலா மாலை. | சிறந்த தேசிக பக்தர். |
| 26. | வாரணமாயிரமாலை. | ஸ்ரீமான் பி. எஸ். திருமலை அய்யங்கார் அவர்கள். |
| 27. | ஸ்ரீ பார்த்தசாரதி யம்மான் பாமாலை. | ஸ்ரீமான் பி. எஸ். கோவிந்த ராஜய்யங்கார் அவர்கள். |
| 28. | தமிழரேத்தும் ஸ்ரீ மணவாளமாமுனிகள். | சந்தமிகு செந்தமிழ்ச் செல்வர். |
| 29. | திருச்சின்னமாலை. | ஸ்ரீமான் கே. துரைசாமி அய்யங்கார் அவர்கள். |
| 30. | திருவேங்கடவர்மாலை. | நான்மறையாளர்கள். |
| 31. | மார்கழி மாலை. | ஸ்ரீமான் பூண்டி அச்சுத கோபாலாசாரியார் அவர்கள். |
| 32. | மதுரகவி மாலை. | ஸ்ரீமான் கே. எஸ். ஸ்ரீநிவாஸாசாரியார் அவர்கள். |
| 33. | திருவருட்சதக மாலை. | ஸ்ரீமான் என். கிருஷ்ணய்யங்கார் அவர்கள். |
| 34. | சீரொன்று தூப்புற்றனியன் மாலை. | அருள் வரதரடியார். |
| 35. | மும்மறைத் தெளிவுப்பொருண் மூதுரை மாலை. | ஸ்ரீமான் அமிஞ்சிக்கரை ஆதிநாராயணஸ்வாமி ரெட்டியார் அவர்கள். |
| 36. | அருளாளர் மாலை. | ஸ்ரீமான் திண்டுக்கல் ராமஸ்வாமி அய்யங்கார் அவர்கள். |
| 37. | பூங்கோதை மாலை. | ஸ்ரீமான் பி. எஸ். கிருஷ்ணய்யங்கார் அவர்கள். ஸ்ரீமான் பி. எஸ். நாராயணய்யங்கார் அவர்கள். |
| 38. | பூமகள் மாலை. | ஸ்ரீமான் பி. கோபாலாசார்யா அவர்கள். |
| 39. | இடைப்பிள்ளை மாலை. | ஸ்ரீமான் பி. ஏ. சந்தானமய்யங்கார் அவர்கள். |
| 40. | செந்தாமரையாள் மாலை. | ராவ்பஹதூர் என். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் அவர்கள். |

பெறும் இடம்: **ஆநந்த பிருந்தாவநம்,**
**ஸ்ரீ மௌனசுவாமிகள் மடத்துத் தெரு, அம்பத்தூர்.**

2, 7, 8, 15, 16 இலக்கம் உள்ளவை இப்போது கைவசமில்லை.

ஸ்ரீ:

ஸ்ரீமதேராமாநுஜாய நம:



# செந்தாமரையாள் மாலை.

திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்க வெளியீடு-40.

இது

ஸர்வமங்கள நந்தனவாண்டு கார்த்திகைத்
திங்கள் இருபத்திரண்டாம் நன்னாள்
திருவல்லிக்கேணி ரதவீதியிலுள்ள திருவஹோபிலமடத்
திரு நரசிங்கன்திருவடிவாரத்தில் இடப்பெற்ற
காணிக்கை.

7-12-1952.

முதற்பதிப்பு—டிசம்பர் 1952

ஸ்ரீ:

# உள்ளுறை.


பக்கம்

முகவுரை. ... 1

[பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி ரெ. திருமலை அய்யங்கார், தமிழ் வித்துவான், காரியதரிசி, திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கம்.]

ஸ்ரீஸ்துதி. ... 5

(ஸ்ரீவேதாந்த தேசிகர்.)

[தமிழ்ப்பா, பதவுரை பொழிப்புரையுடன்.]


83163

Kabeer Printing Works, Madras (2106)

ஸ்ரீ:

# முகவுரை.

திருவரங் கேசர் மார்பிற் றிகழும்பாற் றிரையி னுளுங்
கருதுவார் கருத்திற் பொன்னுர் கமலத்தில் விமல மேவுஞ்
சுருதிசேர் வேதாந் தத்திற் றெழுமடி யேன்ற னெஞ்சிற்
பெருமித முடன்வாழ் கின்ற பிராட்டிதாள் போற்றி போற்றி.
—(திருத்தொண்டர் காதை.)

"ஸ்ரீ" என்று பெரிய பிராட்டிக்குத் திருநாமம். குருபரம் பரையில் இரண்டாவதாக ஓதப்பெற்றுள்ளவள் லக்ஷ்மீ. இவளும் பெருமாளைப் போலே முதல் குருவாம். ஆகையால் இவள் பெரிய பிராட்டி என்னப் பெறுவாள். வேதம் பரனை ச்ரிய:பதி என்றது போல் இவளை விஷ்ணுபத்நி என்றது. திருமாலும் திருமகளும் சேர்ந்தே விளங்கும் திவ்ய தம்பதிகள்; பிரித்து நிலையில்லை. பெருமாளைச் சொன்ன இடமெல்லாம் பெரிய பிராட்டியாரையும் சொல்லிற்று. பெருமாள்பதி. பெரிய பிராட்டி யார் அவன் பத்நீ. பெருமாளும் பெரிய பிராட்டியாரும் தம்பதி களாயே அருளும் தகவுடையோர்கள். பெருமாள் உலகுக் கெல்லாம் பிதா. பெரிய பிராட்டியார் உலகுக்கெல்லாம் மாதா. உலகனைத்தும் இவ்விருவர்களின் மக்கள். மக்களாகிய உலகத் துக்கு, அன்னையும் பிதாவும் ஆகிய லக்ஷ்மியும் நாராயணனும் ஒக்கவே வழிபடவேண்டியவர்கள். இருவர்களும் தம்பதிகளாகை யாலும், உலகத்துக்குத் தாயும் தந்தையும் ஆகையாலும் அவ்விருவர்களும் அவ்வாறு வழிபடவேண்டியவர்கள். இவ்விரு வர்களின் சேர்த்தியே உலகத்துக்குத் தஞ்சம். இம்மிதுநமே அருள் சுரக்கும். இம்மிதுநமே காப்பளிக்கும்.

பெருமாளுடைய அவதாரங்கள் போலே பெரிய பிராட்டியார் அவதாரங்களும் அனேகங்கள். பெருமாள் அவதரிக்குந்தோறும் பெரிய பிராட்டியாரும் அவதரிக்கிருள். இவள் திருநாமங்கள் அனேகங்கள். ஸ்ரீ:, லக்ஷ்மீ, பத்மா, ஜலதிதநயா, விஷ்ணு பத்நீ, பத்மாலயா, ஹரிப்ரியா, இந்திரா, திரு, செய்யாள்,

தாமரையாள், பங்கயத்தாள், திருமகளார் முதலியன அவை. இவள் பெருமாளுடைய தருமத்துணைவி; உலகத்தின் க்ஷேமத்தை நன்கு கருதுபவள்; அருளின் வடிவாயே விளங்குபவள்; என்றுமே கடிதலை அறியாதவள்; இன்னமுதத் திருமகள்; நாராயணனுர் திருமார்பில் திகழும் நந்தாவிளக்கு; அருளுக்குடைய கழிபெருந்தத்துவம். இப்பெரிய பிராட்டி ஈசுவரதத்துவத்திற் சேர்ந்தவள்; எம்பெருமானைப் போல் எங்கும் நிறைந்து நிற்பவள்; ஸர்வேசுவரனைப் போல் நமக்கு உபாயமாகவும் பலனாகவும் நிற்கின்றவள். பிரபத்தியை அநுஷ்டிக்கும்போது முதலில் பிராட்டியைப் புருஷகாரமாகக் கொண்டு பிரபத்தியைச் செய்தே அவ்விருவரையும் பின்பு சரணம் அடைய வேண்டும்.

ஸர்வப்ரகாரத்தாலும், ஸர்வாவஸ்தையிலும், ஸஹதர்மசாரிணியான பெரிய பிராட்டியாரோடு பிரிவில்லாத முழுநலமான அநந்த ஜ்ஞாந ஸ்வரூபமாகவே பரந்தாமனை அநுஸந்திக்க வேண்டும். இவ்வாறு விளங்கும் பரதத்துவமே திருநாரண தத்துவம்.

பெரிய பிராட்டியார் விஷயமாக வேதந் தொடக்கமாக அநேக நூல்களில் தோத்திரங்கள் உள்ளன. அவற்றுள் ஸ்ரீ ஆளவந்தார் அருளிச்செய்த சதுச்லோகீ, கூரத்தாழ்வான் அருளிச்செய்த ஸ்ரீஸ்தவம், ஸ்ரீபராசரபட்டர் அருளிச்செய்த ஸ்ரீகுணரத்நகோசம், ஸ்ரீவேதாந்ததேசிகன் அருளிச்செய்த ஸ்ரீஸ்துதி, ஸ்ரீ திருப்புகழ்ச் சுவாமிகள் இயற்றிய திருமகளந்தாதி முக்கியமானவை.

ஸ்ரீஸ்துதி பெரிய பிராட்டியார் விஷயமாக இருபத்து நான்கு சுலோகங்களும் பலச்ருதியாக ஒரு சுலோகமும் அடங்கியது. இதில் பிராட்டியினுடைய குணாதிசயங்களும், அவதார வைபவமும், ஸர்வபலப்ரதத்வமும், ஈச்வரீத்வமும் நன்றாக நிரூபிக்கப் பெற்றிருக்கின்றன. "பின்பு வேதாந்தாசார்யரும் ஸ்ரீரங்கநாச்சியார் விஷயமாக ஸ்ரீஸ்துதியையும், செய்தருளி" என்று ஸ்ரீவேதாந்ததேசிக வைபவப்ரகாசிகை கூறுகின்றது.

தனக்குவமையில்லாத சீரும் சிறப்பும் எய்தி ஓங்கி விளங்கும் "ஸ்ரீஸ்துதி" தமிழில் சுலோகம், ஸுப்ரீம்கோர்ட் ஸீனியர்

அட்வொகேட் ஸ்ரீமான் கேசவய்யங்கார் அவர்களால் இயற்றப் பெற்ற பாக்கள் (தோத்திரமாலை. பக்கங்கள் 67-70, வெளியீடு 7) பதவுரை பொழிப்புரை இவற்றிேைடு "**செந்தாமரையாள் மாலை**" என்ற திருநாமத்துடன் இச்சங்கத்தின் நாற்பதாவது வெளியீடாகப் பிரசுரிக்கலாயிற்று.

இம்மாலைக்குப் பூரண பொருள் உதவி புரிந்த புண்ணியர் **ராவ்பஹதுர் என். கிருஷ்ணசாமி அய்யங்கார்.** (Retired City Civil Judge, Madras and District Judge at Vellore and Secunderabad.) நம் ஸ்ரீஅழகிய சிங்கரின் திருவடிகளை வாழ்த்தும் நல்லன்பர்கட்கு நற்பூஷணமாய் விளங்கிவரும் நன்மையோனும், சம்பிரதாயாபிவிருத்தியில் நன்னேக்கு உடையவரும், நன்மனத்தரும் ஆகிய அவரும், அவரது உற்ருர் உறவினரும், ஸ்ரீ அழகிய சிங்கரின் பூரணவருள்பெற்று இன்புறுவாராக.

**பொங்கும் மங்கலம் எங்கும் தங்குக.**

கள்ளவிழும் பொற்கமலக் கடிமலரி
னிடைப்பிறந்து கமல நாபி
வள்ளலணி மணிநிறத்திற் கற்பகப்பூங்
கொடியிதென மருவி நாளுந்
தள்ளரிய மிடிப்பிணியும் பவப்பிணியுந்
தவிர்த்திறைவன் ருளிற் சேர்க்கும்
பிள்ளைமதி வாணுதலெம் பிராட்டிதிரு
வடிக்கமலம் பேணி வாழ்வாம்.

—(ஸ்ரீவிஷ்ணுபுராணம்.)

ஸ்ரீரங்கவிலாசம்,
அம்பத்தூர்,
7-12-1952.

ப. ரெ. திருமலை அய்யங்கார்,
காரியதரிசி.

ஶ்ரீ:

# ஶ்ரீஸ்துதி.

ஶ்ரீமாந் வேங்கட நாதார்ய:
கவிதார்க்கிக கேஸரீ,
வேதாந்தா சார்ய வர்யோ மே
ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி.

உத்தம ஞானச் செல்வ னுயர்மறை முடிகளுக்கு
வித்தகப் பொருளுணர்த்து மேன்மையன் வேங்க டேசன்
எத்திறக் கவிஞ ருக்கு மேதுவா தியர்க்கு மேறு
நித்தமு மிடை விடாதெ னெஞ்சினிற் றிகழ்க நின்றே.

[உத்தமஞான ஸம்பத்தை யுடையவரும், வேதாந்தங்களுக்கு சாஸ்த்ரோக்தமான பொருளுரைப்பதில் பிரஸித்தி பெற்றவரும், திருவேங்கடநாதன் என்னும் திருநாமத்தை வகிப்பவரும், கவனம் பண்ணுபவர், ஹேதுவாதம் செய்பவர் இவர்கள் எத்திறமையோராயினும் அவர்களுக்கெல்லாம் சிங்கம்போன்ற வருமான நம்தூப்புல் வேதாந்த தேசிகன் அடியேன் மனத்திலே எப்பொழுதும் வீற்றிருக்கக் கடவர்.]

மாநாதீத ப்ரதித விபவாம்
மங்களம் மங்களா நாம்
வக்ஷ:பீடம் மது விஜயிநோ
பூஷயந்தீம் ஸ்வகாந்த்யா,
ப்ரத்யக்ஷாநுச்ரவிக மஹிம
ப்ரார்த்திநீநாம் ப்ரஜாநாம்
ச்ரேயோ மூர்த்திம் ச்ரியமசரணஸ்
த்வாம் சரண்யாம் ப்ரபத்யே. (1)

மாணப்பெரு மாட்சித்திரு மாமங்கல முதனீ
ஆணப்பன தாகும்திரு மார்வீம்தெளி யொளியோள்
காணப்பெறு கேள்வித்திரு வாழ்வுற்றருள் பெறுவார்
பேணப்புக ழுன்னைத்திரு வுன்னைச்சரண் புகுவேன். (1)

[**அசரண:அஹம்** - புகலொன்றில்லாவடியேன் ; **மாந அதீத-** பிரமாணங்களால் அளக்கமுடியாத ; **ப்ரதித விபவாம்** - பேர் படைத்த மகிமை பொருந்தியவளும் ; **மங்களாநாம் மங்களம்** - மங்களமான வஸ்துக்களுக்கும் மங்களத்தை அளிப்பவளும் ; **மது விஜயிந:**-மது என்னும் அசுரனைச் ஜயித்தவராகிய ஸ்ரீமந் நாராயணனுடைய ; **வக்ஷ:பீடம்** - திருமார்பாகிற பீடத்தை ; **ஸ்வகாந்த்யா** - தன் திருமேனிசோபையால் ; **பூஷயந்தீம்** - அலங்கரித்துக்கொண்டிருப்பவளும் ; **ப்ரத்யக்ஷ** - இந்திரியகோசர மான இகலோகத்திற்கேற்றதும் ; **ஆநுச்ரவிக** - வேதங்களிற் சொல்லப்பெற்ற பரலோகத்திற்கேற்றதுமான ; **மஹிம** - மகி மையை ; **ப்ரார்த்தி நீநாம்** - விரும்புகிற ; **ப்ரஜாநாம்** - ஜனங் களுக்கு ; **ச்ரேயோ மூர்த்திம்** - நன்மையே வடிவுகொண்டது போன்றவளும் ; **சரண்யாம்** - அனைவராலும் சரணம் அடையத் தக்கவளுமான ; **ச்ரியம்** - 'ஸ்ரீ' என்ற திருநாமம் கொண்டவளு மாகிய ; **த்வாம்** - தேவரீரை ; **ப்ரபத்யே** - சரணம் அடைகிறேன்.

வேறு ஒரு கதியும் இல்லாத அடியேன் எண்ணிறந்த மஹிமையை யுடையவளும், சுபகரமான வஸ்துக்களுக்கும் சுபத் தைச் செய்யுமவளும், மதுசூதநனுடைய திருமார்புக்கு அலங்கார மானவளும், இகபரசுகங்களை வேண்டுமவர்கட்கு அளிப்பவளும், சரணமடையத் தகுந்தவளும், அடியார் வினைதீர்க்கும் அவளு மான ஸ்ரீ தேவியைச் சரணம் அடைகிறேன்.]

ஆவிர்ப்பாவ:கலச ஜலதௌ
அத்வரே வாபி யஸ்யா:
ஸ்தாநம் யஸ்யாஸ் ஸரஸிஜவநம்
விஷ்ணு வக்ஷஸ் ஸ்தலம் வா,
பூமா யஸ்யா புவநமகிலம்
தேவி திவ்யம் பதம் வா
ஸ்தோக ப்ரஜ்ஞை ரநவதிகுண
ஸ்தூயஸே ஸா கதம் த்வம். (2)

நீயுற்பவ மொப்பும்நிறை யப்பும்மக நற்பும்
கோயில்மகி ழொண்டாமரை கொண்டா யரிமார்பும்
தேயம்திரு மாவீடொடு தேவுன்னுல கெல்லாம்
தாயுன்தகை யாயும்வகை யாரேயறி வாரே. (2)

[தேவி ! - தாயே !; **யஸ்யா:**—எந்ததேவரீருடைய ; **ஆவிர்ப் பாவ:**-அவதாரமானது ; **கலச ஜலதௌ** - திருப்பாற்கடலில் தானோ!; **அத்வரே வாபி**-அல்லது யாகபூமியில்தானோ!; **யஸ்யா:**-யாதொரு தேவியினுடைய ; **ஸ்தாநம்** - இருப்பிடம் ; **ஸரஸிஜ வநம்** - தாமரைக் காடுதானோ !; **வா விஷ்ணு வக்ஷஸ்தலம்** - அல்லது பகவானுடைய திருமார்புதானோ ! (என்று சொல்லப் பெறுகிறதோ); **யஸ்யா:**—யாதொரு தேவியினுடைய ; **பூமா** - விபூதி ; **அகிலம் புவநம்** - முழு லீலாவிபூதியும் ; **வா திவ்யம் பதம்** - அல்லது பரம பதமும் (ஆகவிருக்கிறதோ) ; **ஸா** - அந்த; **அநவதிகுணா த்வம்** - அளவிறந்த குணவதியான தேவரீர் ; **ஸ்தோக ப்ரஜ்ஞை:**-மிகச் சிற்றறிவுள்ளவர்களால்; **கதம்** - எப்படி; **ஸ்தூயஸே** - ஸ்துதிக்கப் பெறுவீர் ?

தேவீ ! திருப்பாற்கடலிலும், யாக பூமியிலும் அவதரித்த வளும், தாமரையிலும் விண்டுவின் திருமார்பிலும் வஸிப்பவளும், அகிலலோகங்களையும் நித்யவிபூதியையும் விபூதியாகக் கொண்ட வளும், எண்பெருக்கந்நலத்து ஒண்பொருளீறில வண்புகழ் என்ற படி எல்லை காணமுடியாத குணங்களையுடையவளுமான தேவ ரீரை அற்பஜ்ஞாந வடியோங்கள் எப்படி உள்ளபடியே துதிக்க முடியும்? துதிக்கமுடியாது என்றபடி.]

ஸ்தோதவ்யத்வம் திசதி பவதீ
    தேஹிபி: ஸ்தூயமாநா
தாமேவ த்வாம் அநிதரகதி:
    ஸ்தோது மாசம்ஸமாந:,
ஸித்தாரம்ப: ஸகல புவந
    ச்லாக நீயோ பவேயம்
ஸேவாபேக்ஷா தவ சரணயோ:
    ச்ரேயஸே கஸ்ய ந ஸ்யாத். (3)

**கன்னல்துதி யன்னக்கவி மன்னர்க் கருள்தேவே**
**உன்னைத்துதி பண்ணிப்புகழெண்ணப் புகலில்லா**
**என்னைப்புவி கொள்ளப்புக முள்ளக்கவி சொல்வாய்**
**நின்னிற்பெரு நின்தாட்பணி யெண்ணும் திருவீதே.** (3)

[பவதி - தேவரீர் ; தேஹிபி: - சரீரம் படைத்தவர்களால் ; ஸ்தூயமாநா - துதிக்கப்பெற்றவளாய்க் கொண்டு ; ஸ்தோதவ்யத்வம் - அவர்களுக்கு மற்றவர்களினால் துதிக்கப்பெறும் நிலைமையை (அதாவது ஐச்வர்யாதிகளை); திசதி - கொடுக்கிறீர் ; தாம் த்வாமேவ - அப்படி ஔதார்ய குணமுள்ள தேவரீரையே ; அநிதர கதி: - வேறு கதியற்றவடியேன் ; ஸ்தோதும் - துதிக்க ; ஆசம்ஸமாந: - முயன்றவனாய்க்கொண்டு ; ஸித்தாரம்ப: - கைகூடிய ஆரம்பத்தையுடையவனாகவும் ; ஸகலபுவந: - அனைத்துலகத்தாராலும் ; ச்லாகநீய: - கொண்டாடத் தகுந்தவனாக ; பவேயம் - ஆவேன் ; தவ சரணயோ: - தேவரீர் திருவடிகளில் ; ஸேவாபேக்ஷா - கைங்கர்யம் செய்யவேணும் என்ற விருப்பமானது ; கஸ்ய - எவனுக்குத்தான் ; ச்ரேயஸே - க்ஷேமத்தின் பொருட்டு ; நஸ்யாத் - ஆகாது ?

சரீரத்தைப் பெற்றவன் எவனாயினும் அவன் தேவரீரைத் துதித்தால் தேவரீர் அவனுக்கு இதரர்கள் அவனைத் துதிக்கக் கூடிய நிலைமையை அளிக்கிறீர். ஆகையால் அவ்விதம் மிகுந்த கருணாநிதியான தேவரீரையே கதியாகப் பற்றிய அடியேன் தேவரீரைத் துதிக்க எண்ணியபொழுதே ஸித்தியைப் பெற்று எல்லா உலகத்தவராலும் துதிக்கக்கூடியவன் ஆவேன். தேவரீருடைய திருவடிகளில் கைங்கர்யம் செய்யவேண்டும் என்ற ஆசையே மனிதர்களுக்கு அகில நன்மைகளையும் அளிக்கும் அல்லவா ?]

யத் ஸங்கல்பாத் பவதி கமலே
யத்ர தேஹிந்ய மீஷாம்
ஜந்ம ஸ்தேம ப்ரளய ரசநா
ஜங்கமா ஜங்கமாநாம்,
தத் கல்யாணம் கிமபி யமிநாம்
ஏக லக்ஷ்யம் ஸமாதௌ
பூர்ணம் தேஜ: ஸ்புரதி பவதீ
பாதலாக்ஷா ரஸாங்கம். (4)

யவனுளம் கருதவையம் யவனுடம் பென்னயாவும்
யவனிடைத் தோன்றியூன்றி யொடுங்குமா லவனுமுன்தாள்

சவியுமிழ் குழம்புசாரும் குறியினுக் குரியனுயே
தவமெழுந் திருவிழிக்கோர் தனியிலக் காவான்சோதி. (4)

[கமலே ! - ஸ்ரீமஹாலக்ஷ்மியே !; யத்ர தேஹிநி - உலகிலுள்ள வஸ்துக்கள் அனைத்தையும் தனக்குச் சரீரமாகவுடைய எந்தப் பகவானிடத்தில் ; யத்ஸங்கல்பாத் - எந்தப் பரமாத்மாவினுடைய ஸங்கல்பத்தினுல் ; அமீஷாம் - இந்த ; ஜங்கமா ஜங்கமாநாம் - சராசரங்களுடைய ; ஜந்ம ஸ்தேம ப்ரளய ரசநா - சிருட்டி, திதி, ஸங்காரம் இவற்றை அமைத்தல் ; பவதி - உண்டாகின்றதோ ; தத் - அப்படிப்பட்டதாயும் ; கல்யாணம் - மங்களகரமானதும் ; கிமபி - வாக்குக்கு நிலமல்லாததும் ; யமிநாம் - யோகிகளுடைய ; ஸமாதௌ - தியானத்திற்கு ; ஏக லக்ஷ்யம் - ஒரே இலக்கானதும் ; பூர்ணம் - எங்கும் நிறைந்துள்ளதும் ; தேஜ: - ஒளி பொருந்திய திருமேனியையுடையவருமான பகவான் ; பவதீ - தேவரீருடைய ; பாதலாக்ஷாரஸ - திருவடிகளில் அணிந்துகொள்ளப் பெற்ற செம்பஞ்சிக் குழம்பை ; அங்கம் - அடையாளம் உடையதாய்க் கொண்டு ; ஸ்புரதி - பிரகாசிக்கிறது.

லக்ஷ்மீதேவீயே ! எந்தப் பகவானுடைய திருவுள்ளப்படி ஆக்கல், அளித்தல், அழித்தல் முதலியவை நடைபெறுகின்றனவோ, சுபாச்ரயமானதும், வாசாமகோசரமானதும், யோகிகளின் தியானத்தில் ஒரே லக்ஷ்யமானதும், பூர்ணமான தேஜஸ்ஸானதுமான அப்பகவானும் தேவரீருடைய ஸம்பந்தத்தினுலேயே பிரகாசிக்கிருர்.]

நிஷ்ப்ரத்யூஹ ப்ரணயகடிதம்
தேவி நித்யாநபாயம்
விஷ்ணுஸ்த்வம் சேத்யநவதி குணம்
த்வந்த்வ மந்யோந்ய லக்ஷ்யம்,
சேஷச்சித்தம் விமல மநஸாம்
மௌளயச்ச ச்ருதீநாம்
ஸம்பத்யந்தே விஹரண விதௌ
யஸ்ய சய்யா விசேஷா:. (5)

தடையுருத் தகைமைசாலும் தலைமைசா லரியும்நீயும்
இடையரு வருமைநோக்கின் னிருமைகொள் ளொருமைபூக்கும்
படிவமாம் படிகட்கெல்லாம் பணியுமே துஞ்சார்நெஞ்சும்
முடிகளார் மறைகடாமும் திருவுலா மஞ்சமாமே. (5)

[தேவி ! - தாயே!; நிஷ்ப்ரத்யூஹ - இடையூறிராத ; ப்ரணய கடிதம் - அன்பு பூண்டதும் ; நித்ய - எக்காலத்திலும் ; அநபாயம் - அழிவற்றதும், பிரியாததும் ; அநவதி குணம் - அளவில்லாத குணம் உடையதுமான ; அந்யோந்ய லக்ஷ்யம் - ஒன்றையிட்டு ஒன்று நிரூபிக்கத்தக்கதும், ஒன்றுக்கொன்று நிகரானதும் ; விஷ்ணும் - பெருமாளும் ; த்வம்சேதி - தேவரீரும் என்றிப்படி ; த்வந்த்வம் - ஸ்த்ரீ புருஷரூபமான இரட்டை ; யஸ்ய - எந்த மிதுநத்திற்கு ; விஹரண விதௌ - விளையாடுவதற்கு ; சேஷ: - ஆதிசேடனும் ; விமல மநஸாம் - களங்கமற்ற யோகிகளுடைய ; சித்தம் - மனதும் ; ச்ருதீநாம் மௌளயச்ச - வேதாந்தங்களும் ; சய்யா விசேஷா: - சிறந்த படுக்கைகளாக ; ஸம்பத்யந்தே - ஆகின்றன.

தாயே ! தேவரீரும் பகவானும் தடங்கல் இல்லாத விச்வாசத்தினுல் ஒன்று சேர்ந்து ஒரு பொழுதும் எல்லையில்லாத குணங்களுடையதும், ஒருவரின் ஸம்பந்தத்தினுல் மற்றொருவருக்குப் பெருமை உண்டாக்கும் தம்பதிகள் நீங்கள் விளையாடுவதற்கு ஆதிசேடனும், பரிசுத்தர்களின் மனதும், வேதாந்தங்களும் படுக்கையாக ஆகின்றன.]

உத்தேச்யத்வம் ஜநநி பஜதோ:
உஜ்ஜிதோபாதி கந்தம்
ப்ரத்யக்ரூபே ஹவிஷி யுவயோ:
ஏகசேஷித்வ யோகாத்,
பத்மே பத்யுஸ் தவ ச நிகமை:
நித்யமந் விஷ்யமாணே
நாவச்சேதம் பஜதி மஹிமா
நர்த்தயந் மாநஸம் ந:. (6)

அன்னையே அரியும்நீயும் மருவியே யுரிமைகொள்ளும்
தன்மைசா லாவியென்னும் அவிதரும் வேள்விதன்னில்
பின்னையும் மறைகளோரும் மகிமையின் மிகைமைதேறும்
நன்மையே கொள்ளுமுள்ளக் களிநடம் புரிவம்நாமே. (6)

[**ஜநநி !** - அன்னையே !; **பத்மே !** - இலக்குமியே !; **ப்ரத்யக்ரூப** - ஜீவாத்மாவாகிற ; **ஹவிஷி** - ஹோமம் செய்யப்பெறும் த்ரவ்யத்தில், ஆத்ம ஸமர்ப்பணயக்ஞத்தில் ; **உஜ்ஜிதோபாதிகந்தம்** - மற்றொரு வஸ்துவை இடையிடாமல், நேராகவே ; **உத்தேச்யத்வம்** - ஹவிஸ்ஸை வாங்கிக் கொள்ளுகிறபடியை ; **பஜதோ:** - அடையாநின்ற ; **யுவயோ:** - தேவரீர்கள் இருவருடைய ; **ஏகசேஷித்வ யோகாத்** - ஒரே சேஷியாயிருக்குந் தன்மை கொண்டு ; **பத்யு:** - தேவரீருடைய பர்த்தாவினுடையவும், பகவானுடையவும் ; **தவச:** - தேவரீருடையவும் ; **நித்யம்** - எப்பொழுதும் ; **நிகமை:** - வேதங்களால் ; **அந்விஷ்யமாண:** - தேடும்படிக்குள்ள ; **மஹிமா** - பெருமையானது ; **ந:** - அடியோங்களுடைய ; **மாநஸம்** - மநத்தை ; **நர்த்தயந்** - ஆச்சரியத்தால் ஆடச் செய்துகொண்டு ; **அவச்சேதம்** - இவ்வளவு என்று அளவிடப்படும் தன்மையை, பிரிவை, எல்லையை ; **ந பஜதி** - அடைகிறதில்லை.

தாயே ! லக்ஷ்மியே ! தேவரீரும் பகவானும் ஜீவாத்மாவாகிற ஹவிஸ்ஸைக் குறித்து ஒரே சேஷியாதலால் காரண சேஷமேயில்லாமல் நேராக உத்தேச்யம் ஆகிறீர்கள். வேதாந்தங்களும் இன்னும் தேடிக்கொண்டிருக்கின்றதும், எங்கள் மனத்தைக் கொந்தளிக்கச் செய்கின்றதுமான தேவரீருடைய பெருமைக்கு எல்லையே இல்லை.]

பச்யந்தீஷு ச்ருதிஷு பரித:
    ஸூரிப்ருந்தேந ஸார்த்தம்
மத்யே க்ருத்ய த்ரிகுண பலகம்
    நிர்மித ஸ்தாந பேதம்,
விச்வாதீச ப்ரணயிநி ஸதா
    விப்ரம த்யூத வ்ருத்தௌ
ப்ரும்மேசாத்யா தததி யுவயோ:
    அக்ஷசார ப்ரசாரம். (7)

சுருதிகள் கருதிநோக்கச் சூரியர் பரிதிசூழத்
திரிகுணப் பலகையூடே நிலேகளாம் பலவகுத்தே
அரியுயிர்த் துணேவிநீவி ராடுமா மாயச்சூதில்
அரனயன் முதலோரவ்வச் சாரிகைச் சரிதையேற்பார். (7)

[விச்வாதீச ப்ரணியிநி! - ஸர்வலோகநாதனுடைய உயிர்த் துணேவியே !; ச்ருதிஷு - வேதங்கள் ; ஸூரி ப்ருந்தேந ஸார்த்தம் - நித்திய ஸூரித்திரளுடன் ; பரித: - நாற்புறத்திலும்; பச்யந்தீஷு - பார்த்துக்கொண்டிருக்கும்பொழுது ; நிர்மித ஸ்தாந பேதம் - கருவிவைக்கும் இடக்குறிப்புள்ள, ஸத்யலோகம் முதலான ஸ்தானங்களேயுடையதான ; த்ரிகுணபலகம் - சத்வர ஜஸ்தமோ குணங்களால் அமைந்த ப்ரக்ருதியாகிற சூதாட்டப் பலகையை ; மத்யே க்ருத்ய - நடுவில் வைத்து ; ஸதா - எக்காலத்தும் ; யுவயோ: - தேவரீர்கள் இருவருடையவும் ; விப்ரமத்யூதவ்ருத்தௌ - விளேயாட்டுக்காக ஆடும் சொக்கட்டான் ஆட்டத்தில் ; ப்ரும்மேசாத்யா: - அயன் அரன் முதலியோர் ; அக்ஷசார ப்ரசாரம் - சூதாட்டப்பாச்சைகளின் நடையை ; தததி - தரிக்கின்ருர்கள்.

ஸர்வேச்வரனுடைய இன்னுயிர்த்தேவியே ! தேவரீருடைய துணேவரான ஸ்ரீமந்நாராயணனும் தேவரீரும் லீலார்த்தமாக ஜகத் ச்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் ஆகிய சொக்கட்டான் ஆட்டத்தை ஆடுகிறீர்கள். அதற்குப் பல வர்ணங்களேயுடைய பலகை பல குணங்களேயுடைய மூலப்ரக்ருதி, ஸத்யலோகமே கட்டம், பிரமாதிகள் சொக்கட்டான்காய்கள், அக்காய்களேத்தள்ளுவது போன்றது பிரமன் முதலானேரைச் செலுத்துவது, சுருதிகளும், ஸூரிகளுமே சுற்றிலும் நின்றுகொண்டு வேடிக்கை பார்ப்பவர். இங்ஙனம் இருவரும் லீலாவிபூதி வ்ருத்திசெய்து மிகவும் உவக்கின்றனர்.]

அஸ்யேசாநா த்வமஸி ஜகத:
ஸம்ச்ரயந்தீ முகுந்தம்
லக்ஷ்மீ: பத்மா ஜலதி தநயா
விஷ்ணுபத்நீந்திரேதி,

யந்நாமாநி ச்ருதி பரிபணாந்
யேவமாவர்த்த யந்தோ
நாவர்த்தந்தே துரித பவந
ப்ரேரிதே ஜந்ம சக்ரே. (8)

உலகினுக் கிறைவி நீயாம் முகுந்தனை யணைந்ததாயே
இலக்குமி பதுமை யாழியுதித்தவள் விண்டுவில்லாள்
நிலவுமிந் திரையென்றேதும் நாமமே நாத்தழும்பும்
வலியெழப் பிறவியாழிச் சுழலிடை யுழலாரம்மா. (8)

[**அஸ்ய ஜகத:** - இந்த உலகத்துக்கு; **த்வம்** - தேவரீர்; **முகுந்தம்** - வரந்தருமவனைநாயகனை; **ஸம்ச்ரயந்தீ ஸதீ** - அணைந்தவளாய்க்கொண்டு; **ஈசாநா** - நாயகியாக; **அஸி** - இருக்கிறீர்; **லக்ஷ்மீ:** - இலக்குமி என்றும்; **பத்மா** - பத்மை என்றும்; **ஜலதி தநயா** - கடல்மகள் என்றும்; **விஷ்ணு பத்நீ** - எங்கும் நிறைந்த ஸ்ரீமஹா விஷ்ணுவின் தர்மபத்நி என்றும்; **இந்திரா** - இந்திரை என்றும்; **இதி** - இவ்வாறு; **ச்ருதி பரிபணாநி** - வேதத்துக்கு மூலதநங்களான; **யந்நாமாநி** - யாதொரு தேவரீர் திருநாமங்களை; **ஏவம்** - முன்கூறியபடியே; **ஆவர்த்தயந்த:** - ஜபிக்குமவர்கள்; **துரித பவந** - பாபம் என்னும் காற்றினால்; **ப்ரேரிதே** - சுழற்றப்பெற்ற; **ஜந்ம சக்ரே** - பிறவிச் சுழலில்; **நாவர்த்தந்தே** - சுழல்வதில்லை.

பத்நீ என்பதால் தேவரீர் பகவானுக்குச் சேஷமாயிருந்த போதிலும் மற்ற ஸகல ஜகத்திற்கும் தேவரீர் சேஷியாதலால் லக்ஷ்மீ, பத்மை, ஜலதிதநயை, விஷ்ணுபத்நி, இந்திரை என்றிப்படிச் சொல்லப்பெற்ற தேவரீருடைய திருநாமங்களை ஆவ்ருத்தி செய்பவர்கள் பாபத்தின் புலமாகிய பிறவியை அடைய மாட்டார்கள்.]

த்வாமே வாஹு: கதிசிதபரே
த்வத் ப்ரியம் லோகநாதம்
கிம் தைரந்த: கலஹமலிநை:
கிஞ்சிதுத்தீர்ய மக்நை:

த்வத் ஸம்ப்ரீத்யை விஹரதி ஹரௌ
ஸம்முகீநாம் ச்ரூதீநாம்
பாவாரூடௌ பகவதி யுவாம்
தைவதம் தம்பதீ ந:. (9)

உன்னதே யாட்சியென்பார் உன்பதிக் கேயதென்பார்
என்னிதா முள்ளப்பூச லேறியே வீழ்வார்வாழ்வு
உன்னுளக் களியிஞட்சி யுவந்துல காக்குமாலென்
றுன்னுமா மறையினுள்ளப் பொருளெமக் கிரட்டைநீவிர். (9)

[ஹேபகவதி ! - ஞாநம், சக்தி, ஐசுவரியம் முதலான ஆறு குணங்கள் நிறைந்த தேவியே ! ; **கதிசித்** - சிலர் ; **த்வாமேவ** - தேவரீரையே ; **லோகநாதம்** - அகில உலகங்களுக்கும் ஸ்வாமியாக ; **ஆஹு:** - சொல்லுகின்ருர்கள் ; **அபரே** - வேறு சிலர் ; **த்வத் ப்ரியமேவ** - தேவரீர் பதியையே (உலக நாதனுகச்) ; **ஆஹு:** - சொல்லுகின்றனர்; **அந்த: கலஹ மலிநை:** - ஒருவர்க்கொருவர் கலகத்தால் கலக்கமுற்ற (அதாவது ஸித்தாந்தம் இன்னதென்று கண்டுபிடிக்காமல் தயங்கிக் கொண்டிருக்கிற) ; **கிஞ்சித் உத்தீர்ய** - (ஆற்று வெள்ளத்தில் அகப்பட்டுக்கொண்டவர் போல்) சிறிது மேற்கிளம்பி ; **மக்நை:** - மறுபடியும் பிரவாஹத்தில் முழுகிப் போனவருமான (அவர்களுக்குச் சமானமான) ; **தை:** - அவர்களைக் கொண்டு ; **கிம்** - என்ன பயன் ? ; **த்வத் ஸம்ப்ரீத்யை:** - தேவரீரது உகப்புக்காக ; **விஹரதி** - விளையாடுகிற ; **ஹரௌ** - பகவானிடத்தில் ; **ஸம்முகீநாம்** - பொருள் கொண்ட (அதாவது பகவானைப்பற்றிச் சொல்லுகிற); **ச்ரூதீநாம்** - வேதங்களினுடைய; **பாவாரூடௌ** - அகப் பொருளாகக் கொள்ளப்பெற்ற (அந்தரங்கமான அபிப்பிராயம் இது என்று ஒப்புக்கொள்ளப் பெற்ற) ; **யுவாம் தம்பதீ** - தேவரீர்கள் பார்யாபதிகளாகவே ; **ந:** - அடியோங்களுக்கு ; **தைவதம்** - பரதேவதை.

பகவானைப் போலவே ஆறு குணங்களும் நிறைந்த தாயே ! சிலர் தேவரீரையே உலக நாயகனுகச் சொல்லுகின்றனர். வேறு சிலர் உமது பதியையே அங்ஙனம் கூறுகின்றனர். அப்படி அவர்கள் சொல்லுவதற்குக் காரணம் தமோ குணத்தினுல் மலினமான புத்தியே யாகும். ஆதலால் அவர்கள் வார்த்தை அங்கீ

கரிக்கத் தக்கதல்ல. தேவரீரது ப்ரீதிக்காகவே விளையாடுகிற பகவானையே பரதேவதை என்று வேதங்கள் ப்ரதி பாதிக்கிற படியினால் தேவரீர்கள் இருவருமே எங்களுக்குப் பரதேவதை.]

ஆபந்நார்த்தி ப்ரசமநவிதௌ
பத்த தீக்ஷஸ்ய விஷ்ணோ:
ஆசக்யுஸ் த்வாம் ப்ரிய ஸஹசரீம்
ஐகமத்யோபபந்நாம்,
ப்ராதுர்ப்பாவைரபி ஸமதநு:
ப்ராத்வமந்வீயஸே த்வம்
தூரோத்க்ஷிப்தை ரிவ மதுரதா
துக்தராசேஸ் தரங்கை:. (10)

வருந்துவார் துயரந்தீர்க்கும் விரதமே பூண்டமாலார்
பொருந்துமார் வெழில்பொதிந்த வொருமனத் திருவாயன்னான்
வருந்தொறு மவனோடொக்க வருந்திரை யெழுந்தாலன்ன
மருந்தினுள் ளிரதமேபோல் நீயுமே வருவாய் தாயே. (10)

[ஆபந்நார்த்தி - அடியவர்களின் வினையை; ப்ரசமநவிதௌ - போக்குவதில்; பத்ததீக்ஷஸ்ய - கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிற; விஷ்ணோ: - பகவானுக்கு; த்வாம் - தேவரீரை; ஐகமத்யோபபந்நாம் - ஒரே அபிப்ராயத்தை அடைந்த; ப்ரியஸஹசரீம் - அன்பு வாய்ந்த தர்ம பத்நியாக; ஆசக்யு: - சொல்லுகிறார்கள்; தூரோத்க்ஷிப்தை: - வெகு தூரத்திற் சிதறப் பெற்ற; துக்தராசே: - திருப்பாற் கடலின்; தரங்கை: - அலைகளால்; மதுரதாஇவ - இனிப்புப் போல; ப்ராதுர்பாவைரபி - பகவானுடைய அவதாரங்களாலும்; ஸமதநு: - அந்தந்த அவதாரங்களுக்கு ஏற்றவாறு உருவம் எடுத்துக்கொண்டு; த்வம் - தேவரீர்; ப்ராத்வம் - அநுகூலமாக; அந்வீயஸே - கூட வருகிறீர்.

ஆச்ரிதர்களுடைய ஆபத்தைத் தீர்ப்பதற்குக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிற பகவானுக்கு ஒரே அபிப்பிராயத்தையுடைய தர்மபத்நியாக தேவரீரைச் சொல்லுகிறார்கள். பகவானுடைய திருவவதாரங்கள் தோறும் அந்தந்த அவதாரங்களுக்குத் தகுந்த

படி அவதரித்திருக்கிற தேவரீர் திருப்பாற்கடலின் அலேகள் வெகு தூரம் விலகிவந்த போதிலும் தேவரீருக்கு அஸாதாரணமான இனிமையை விடாதிருப்பதைப்போல பகவானல் விடப்படுவதில்லே.]

தத்தே சோபாம் ஹரி மரதகே
தாவகீ மூர்த்திராத்யா
தந்வீ துங்க ஸ்தநபரநதா
தப்த ஜாம்பூநதாபா,
யஸ்யாம் கச்சந்த்யுதய விலயை:
நித்யமாநந்த ஸிந்தௌ
இச்சா வேகோல் லஸிதலஹரீ
விப்ரமம் வ்யக்தயஸ்தே. (11)

அரியெனும் மரதகத்தோ ராதியா முன்தன்மூர்த்தி
தருமெழில் சுட்டபொன்னின் திருவெமக் கம்மமூட்டும்
திருவுனு தீறிலின்ப வெள்ளமா மூர்த்திதன்னில்
கருதுமுன் னவதாரங்கள் தரங்கமா யெழுந்தொடுங்கும். (11)

[**தந்வீ** - சிறுத்த இடையுடையவும்; **துங்க** - உந்நதமான; **ஸ்தநபர** - தனபாரத்தினல்; **நதா** - வணங்கினவும்; **தப்த** - உருக்கி ஓடவிடப்பட்ட; **ஜாம்பூநத** - உயர்ந்த தங்கத்திற்கொப்பான; **ஆபா** - சோபையை யுடையவும்; **ஆத்யா** - எல்லா அவதாரங்களுக்கும் முதற்கிழங்கானவும்; **தாவகீ** - தேவரீருடைய; **மூர்த்தி:** - திருமேனியானது; **ஹரிமரதகே** - மரகதப்பச்சை போன்ற பெருமாள் திருமேனியில்; **சோபாம்** - அழகை; **தத்தே** - உண்டாக்குகிறது; **நித்யம்** - எக்காலத்திலும்; **ஆநந்த ஸிந்தௌ** - ஆநந்தக்கடலாகிய; **யஸ்யாம்** - எந்தரூபத்தில்; **தே** - தேவரீருடைய; **வ்யக்தய:** - அவதாரங்கள்; **உதய** - தோன்றுவதினலும்; **விலயை:** - உள்ளே ஒடுங்குவதினலும்; **இச்சா** - ஸங்கல்பத்தினுடைய; **வேக** - வேகத்தினல்; **உல்லஸித** - உண்டாகிய; **லஹரீ** - அலேகளுடைய; **விப்ரமம்** - முறையை; **கச்சந்தி** - அடைகின்றன.

மெலிந்ததும் பருத்ததுமான தனபாரத்தினல் சிறிது வளேந்தும் உருக்கி ஓடவிடப்பட்ட தங்கத்தைப்போல் ஒளியை உடையது

மான தேவரீருடைய ஆதிஉருவம் மரகதம் போன்ற நீல வர்ணத்தையுடைய பகவானது திருமேனியில் அழகை உண்டாக்கு கிறது. ஆநந்தசாகரமாகிய அந்தமூல உருவத்திலிருந்து தேவரீ ருடைய மற்ற அவதாரத் திருமேனிகள் உண்டாகி அதிலேயே சேர்ந்து விடுவதால் ஸங்கல்பத்தினால் உண்டாகிய அலைகளின் கிரமத்தை அடைகின்றன.]

ஆஸம்ஸாரம் விததமகிலம்
வாங்மயம் யத் விபூதி:
யத் ப்ரூபங்காத் குஸும தநுஷ:
கிங்கரோ மேரு தந்வா,
யஸ்யாம் நித்யம் நயந சதகை:
ஏகலக்ஷ்யோ மஹேந்த்ர:
பத்மே தாஸாம் பரிணதிரஸௌ
பாவலேசைஸ் த்வதீயை:. (12)

யவளுடைச் செல்வமாமோ அளப்பரும் படைப்பிற்சொற்கள்
யவள்புருகுடியால் மேருவில்லியை வெல்வான் வில்லி
யவளுரு வொன்றேகொண்பான் ஆயிர நயனத்தேவன்
அவருயர் நிலைகள்யாவும் நிகழ்வதுன் கருத்தின்கண்ணே. (12)

[**ஆஸம்ஸாரம்** - சிருஷ்டிமுதல் ; **விததம்** - எங்கும் பரவிய ; **அகிலம் வாங்மயம்** - ஸம்பூர்ணமான வாக்குரூபமும் ; **யத் விபூதி:** - எந்த ஸரஸ்வதியின் ஸம்பத்தோ ; **மேரு தந்வா** - மகா மேருபர்வதத்தை வில்லாகப் பிடித்த சிவபிரானும் ; **யத் ப்ரூபங்காத்** - யாதொரு பார்வதியின் புருவங்களின் அசைவதைக் காரணமாகக்கொண்டு ; **குஸும தநுஷ:** - புஷ்பபாணனான மன்மதனுக்கு ; **கிங்கர:** - இட்டவேலை செய்பவனாக, பரவசனாக, ஆய்விட்டானோ ; **மஹேந்த்ர:** - தேவேந்திரனும் ; **யஸ்யா:** - எந்த இந்திராணியிடத்தில் ; **நயநசதகை:** - ஆயிரங்கண்களாலும் ; **நித்யம் ஏகலக்ஷ்ய:** - எப்பொழுதும் ஒரே நோக்குடையவனோ ; **பத்மே!** - ஏதேவியே !; **தாஸாம்** - அந்தக் கலைமகள், மலைமகள், இந்த்ராணிகளுடைய ; **அஸௌ பரிணதி** - இந்தப்படி புருஷனை வசம் பண்ணும்படிக்குள்ள மேன்மையும் ; **த்வதீயை:** - தேவரீ ருடைய; **பாவ லேசை:** - மிகச்சிறிய ஸங்கல்பங்களால் வந்தவை.

லக்ஷ்மீ! ஸரஸ்வதி வார்த்தையாக உலகமெங்கும் வியா பரித்து நிற்பதும், பார்வதி உருத்திரனே மன்மதனுக்கு அடிமை யாக்கினதும், இந்திராணி தேவேந்திரனைத் தன் வசமாக்கியதும் ஆகிய இப்பெருமைகள் அவர்களுக்குத் தேவரீருடைய ஸங்கற்பத் தின் லேசத்தினுல் உண்டானது.]

அக்ரேபர்த்துஸ் ஸரஸிஜமயே
பத்ரபீடே நிஷண்ணும்
அம்போராசே ரதிகதஸுதா
ஸம்ப்லவாதுத்திதாம் த்வாம்,
புஷ்பாஸார ஸ்தகித புவநை:
புஷ்கலாவர்த்தகாத்யை:
க்ல்ப்தாரம்பா: கநக கலசை:
அப்யஷிஞ்சந் கஜேந்த்ரா:. (13)

அலேகடல் மலேகலக்க அமுதென உதித்தவேதத்
தலேவியென் றுன்னேயாங்கோர் தாமரைத் தவிசுதாங்க
வலிகொளுன் வலவன் முன்னே புட்கலா வர்த்தமாரி
மலிதருங் கரிகள்பொன்னுர் மங்கலக் கலசமாட்டும். (13)

[**அதிகத** - அடையப்பட்ட; **ஸுதா ஸம்ப்லவாத்** - அமிரு தத்தினுடைய பிரவாஹத்தோடுகூடிய; **அம்போராசே:** - திருப் பாற்கடலில் நின்றும்; **உத்திதாம்** - அவதரித்தவளாயும்; **பர்த்து:** - பதியான பகவானுடைய; **அக்ரே** - முன்புறத்தில் (எதிரில்); **ஸரஸிஜமயே** - தாமரைப்பூவாகிற; **பத்ரபீடே** - மங்கள சிங்காதனத்தில்; **நிஷண்ணும்** - வீற்றிருப்பவளுமான; **த்வாம்** - தேவரீரை; **கஜேந்த்ரா:** - திக்கஜங்கள்; **புஷ்பஸார** - மலர்மாரியினுல்; **ஸ்தகித** - மறைக்கப்பெற்ற; **புவநை:** - உலகங் களே உடையதான; **புஷ்கலாவர்த்த காத்யை:** - புஷ்கலாவர்த் தம் என்று பெயருடைய மேகம் முதலியவைகளாலே; **க்ல்ப்தா ரம்பா:** - சரியான தொடக்கம் செய்ததாய்க்கொண்டு; **கநக கலசை:** - பொற்குடங்களால்; **அப்யஷிஞ்சந்** - அபிஷேகம் செய்வித்தன.

அமிருதமயமான பெருக்கையுடைய திருப்பாற்கடலிலிருந்து தேவரீர் அவதரித்துப் பகவானுக்கு எதிரில் தாமரைப் புஷ்பத்தில்

வீற்றிருப்பதைக்கண்டு புஷ்கலாவர்த்தம் முதலிய ஏழு மேகங்களும் பூமாரி சொரிந்தன. அப்பொழுது திக்கஜங்கள் தங்கக் குடங்களில் அந்த மலர் மாரியை மொண்டு தேவரீருக்குத் திருமஞ்சனம் செய்தன.]

ஆலோக்ய த்வாம் அம்ருத ஸஹஜே
விஷ்ணு வக்ஷ: ஸ்தலஸ்தாம்
சாபாக்ராந்தா: சரணமகமந்
ஸாவரோதா: ஸுரேந்த்ரா:,
லப்த்வா பூயஸ்த்ரி புவநமிதம்
லக்ஷிதம் த்வத் கடாக்ஷை:
ஸர்வாகார ஸ்திர ஸமுதயாம்
ஸம்பதம் நிர்விசந்தி. (14)

அமுதமே பொதியத்தோன்றி அரியுரத் துறையக் கண்டே
அமரர்தங் குமரியோடே யன்னையுன் னபயமென்னத்
தமர்களென் றவர்கள் சாபம் தீரநீ போரநோக்க
அமைதியே யவர்களெய்தி யகிலமும் மகிழப்பெற்ருர். (14)

[**அம்ருதஸஹஜே!** - அமுதத்துடன்பிறந்ததிருமகளே!; **சாபாக்ராந்தா:** - சாபத்தினுல் பீடிக்கப்பட்டவர்களும்; **ஸாவரோதா:** - பத்நிகளுடன் கூடியவர்களுமான; **ஸுரேந்த்ரா:** - தேவகணங்களுக்குத் தலைமை வகித்த இந்திராதிகள்; **விஷ்ணு வக்ஷஸ்தலஸ்தா:** - அமுதிற் பிறந்து பெருமாள் திருமார்பில் வீற்றிருந்த; **த்வாம்** - தேவரீரை; **ஆலோக்ய** - ஸேவித்துக் கொண்டு; **சரணம் அகமந்** - சரணம் அடைந்தார்கள்; **த்வத் கடாக்ஷை:** - தேவரீரது கடாக்ஷ வீக்ஷணங்களால்; **லக்ஷிதம்** - குறிப்பிடப்பெற்று ஸம்ருத்தமான; **இதம் த்ரிபுவநம்** - இந்த மூன்று உலகங்களையும்; **பூய:** - மறுபடியும்; **லப்த்வா** - அடைந்து; **ஸர்வாகார** - எல்லாவற்றிலும்; **ஸ்திரஸமுதயாம்** - அழிவில்லாத வளருதலையுடையதான; **ஸம்பதம்** - ஐசுவரியத்தை; **நிர்விசந்தி** - அநுபவிக்கிருர்கள்.

தேவரீர் திருப்பாற்கடலில் அவதரித்துப் பகவானுடைய திருமார்பை அடைந்த பிறகு துர்வாஸ முனிவரின் சாபத்தினுல்

மூவுலகங்களையும் இழந்த தேவர்களும் அவர்களுடைய பத்தினிகளும் தேவரீரைச்சரணமாக அடைந்தார்கள். பின்பு தேவரீர் தேவரீருடைய திருக்கண்களால் கடாக்ஷிக்க அதனுல் மக்களைப் பெற்ற மூன்று உலகங்களையும் மறுபடியும் அடைந்தனர். அம்மட்டோடு நிற்காமல் இனி ஒருபொழுதும் அழிவில்லாதபடி அந்த ஐசுவரியத்தை அநுபவித்துக்கொண்டு வருகிருர்கள்.]

ஆர்த்த த்ராண வ்ரதி பிரம்ருதா
ஸார நீலாம்பு வாஹை:
அம்போஜாநாமுஷஸி மிஷதாம்
அந்தரங்கைரபாங்கை:,
யஸ்யாம் யஸ்யாம் திசி விஹரதே
தேவி த்ருஷ்டிஸ் த்வதீயா
தஸ்யாம் தஸ்யாம் அஹமஹமிகாம்
தந்வதே ஸம்பதோகா:. (15)

ஆதுரர்க் கமுதமாரி பொழியுமுன் மழையின்வண்ணப்
போதவிழ் பதுமச்செவ்வி யுமிழ்தரு மமிழ்தநோக்கொன்
றேதுமே நடனமாடும் திசைதிசைச் செல்வம்யாவும்
மோதியான் முந்தியானென் ருேடியே வந்துநாடும். (15)

[ஆர்த்த - ஆபத்தை அடைந்து வருந்தியவர்களை ; த்ராண - ரக்ஷிப்பதையே ; வ்ரதிபி - விரதமாகக்கொண்டனவும் ; அம்ருத - அமிருதமயமான ; ஆஸார - மழையைப் பொழிகிற ; நீலாம்பு வாஹை: - கருமேகம் போன்றனவும்; உஷஸி - விடியற்காலையில்; மிஷஸாம் - மலருகின்ற ; அம்போ ஜாநாம் - தாமரைப் பூக்களுக்கு ; அந்தரங்கை: - தோழமை பூண்டவையுமான ; அபாங்கை: - கடைக்கண்களால்; யஸ்யாம் யஸ்யாம் - எந்த எந்த ; திசி - திக்கில் ; த்வதீயா த்ருஷ்டி: - தேவரீருடைய பார்வை ; விஹரதே : விளையாடுகிறதோ, அதாவது உலாவுகிறதோ ; தஸ்யாம் தஸ்யாம் திசி - அந்தந்தத்திக்கில் ; ஸம்பதோகா: - ஐச்வர்ய ப்ரவாஹங்கள் ; அஹமஹமிகாம் - நான் முன்பு நான் முன்பு போவேன் என்பதனை ; தந்வதே - செய்கின்றன.

தேவியே! கஷ்டப்படுகிறவர்களைக் காப்பாற்றுவதிலே தீக்ஷித்துக் கொண்டதும், அமிருதம்போல் குளிர்ச்சியையும், இன்பத்தையும், அழியாமையையும் கொடுப்பவைகளும், அப்பொழுது அலர்ந்த செந்தாமரை மலர்களைப் போன்றவைகளுமான தேவரீரது திருக்கண்களினால் கடாக்ஷிக்கப்பெற்ற திக்கை நோக்கி ஸம்பத்துக்கள் போட்டி போட்டுக்கொண்டு ஓடுகின்றன.]

யோகாரம்ப த்வரித மநஸோ
யுஷ்மதைகாந்த்ய யுக்தம்
தர்மம் ப்ராப்தும் ப்ரதமமிஹ யே
தாரயந்தே தநாயாம்,
தேஷாம் பூமேர் தநபதி க்ருஹாத்
அம்பரா தம்புதேர் வா
தாரா நிர்யாந்த்யதிகமதிகம்
வாஞ்சிதாநாம் வஸூநாம். (16)

தம்பதி யென்ற நீவிர் தம்பதியென்றே தேறும்
தம்பெரும் தருமம்காக்கத் தமர்களே கருதும்செல்வம்
அம்புவி யளகையாழி யம்பரம் யாவு மொன்றிப்
பம்பியே செல்வவெள்ளம் கருத்தையும் கடந்துபெய்யும். (16)

[யே - யாதொருதனார்த்திகள்; யோக ஆரம்ப - கர்மாநுஷ்டானம் தொடங்குவதில்; த்வரித மநஸ: - ஊக்கமுள்ள மனம் உடையவர்களாய்க் கொண்டு; யுஷ்மத் - தேவரீரும் பெருமாளும் ஆகிற தேவரீர்களையே; ஐகாந்த்ய யுக்தம் - அடைவது என்று உறுதி உடைய; தர்மம் - கர்மாநுஷ்டாநத்தை; ப்ரதமம் - முதலில்; ப்ராப்தம் - அடைவதற்கு; தநாயாம் - தனத்தில் ஆசையை; தாரயந்தே - கொள்ளுகின்றார்களோ; தேஷாம் - அவர்களுக்கு; பூமேர்வா - பூமியினின்றுவது; தநபதி க்ருஹாத்வா - குபேரன் வீட்டினின்றுவது; அம்பராத்வா - ஆகாயத்தினின்றுவது; அம்புதேர்வா - கடலினின்றுவது; வாஞ்சிதாநாம் - வேண்டப்பெற்ற; வஸூநாம் - த்ரவ்யங்களுடைய; தாரா: - பிரவாஹங்கள்; அதிகமதிகம் - அவரவர் விரும்பின அளவினும் அதிகமாக; நிர்யாந்தி - வெளிவருகின்றன.

யோகாப்யாஸம் செய்வதில் மிகுந்த ஊக்கத்துடன் அதற்கு முன் தேவரீர்களையே குறித்து தர்மம் செய்யவெண்ணி எவர்கள் அதற்குப் பொருள் வேண்டும் என்று விரும்புகிறுர்களோ அவர்களுக்குப் பூமி, குபேரனுடைய பொருட்சாலை, ஆகாசம், கடல், முதலிய இடங்களிலிருந்து பொருள் தாரை தாரையாய் வேண்டியதற்குமேல் கிட்டுகிறது.]

ஸ்ரேயஸ்காமா: கமலநிலயே
சித்ரமாம்நாய·வாசாம்
சூடா பீடம் தவ பத யுகம்
சேதஸா தாரயந்த:,
சத்ரச் சாயா ஸுபக சிரஸ:
சாமர ஸ்மேர பார்ச்வா:
ச்லாகா கோஷ ச்ரவணமுதிதா:
ஸ்ரக்விணஸ் ஸஞ்சரந்தி. (17)

மாமறை முடியின்மாட்சி மலர்த்துமுன் பதுமபாதம்
தூமனத் தூணைபற்றித் தாபதர் சென்னிதாங்க
ஆமவர்க் கர்சுவீசும் கவரியும் குடையும்மாலைச்
சேமவாய் மொழியும்யாவும் செல்விநின் னருளினுலே. (17)

[கமலநிலயே ! - செந்தாமரை மலரில் வஸிக்கின்றதேவியே !; ச்ரேயஸ்காமா: - ஸம்பத்தையும் மேன்மையையும் விரும்புவோர் ; ஆம்நாயவாசாம் - வேதவாக்குக்களுக்கு ; சித்ரம் - அழகு பொருந்தின ; சூடாபீடம் - தலையலங்காரம்போன்ற ; தவ பத யுகம் - தேவரீருடைய திருவடியிணைகளை ; சேதஸா - மனத்தினுல் ; தாரயந்த: - தரித்தவர்களாய்க்கொண்டு ; சத்ரச்சாயா - வெண்குடை நிழலினுல் ; ஸுபகசிரஸ: - விளங்கினமுடியினரும் ; சாமர ஸ்மேர பார்ச்வா: - இருபுறமும் வெண்சாமரம் வீசப் பெற்றவரும் ; ச்லாகா கோஷ ச்ரவண - ஸ்துதிவாக்கியங்களைக் கேட்டு ; முதிதா: - மனமகிழ்ந்தவரும் ; ஸ்ரக்விண: - நற்பூமாலை யணிந்தவரும் ; ஸஞ்சரந்தி - யானைகுதிரைமேல் ஏறித்திரி கிறுர்கள்.

ஹேகமலையே ! வேதாந்தங்களில் சொல்லப்பெற்ற தேவரீரது திருவடிகளை மனத்தில் தியானம் செய்யும் இவ்வுலக இன்பத்தில்

இச்சையுடைய ஜனங்கள் வெண்குடைபோட, இருமருங்கும் வெண்தாமரைவீச, வந்திகள் பிருதுகள்கூற, தம்மைத்தாமே மதித்துக்குஞ்சரம் ஊரும் சக்ரவர்த்திகளாக விளங்குகிறுர்கள்.]

ஊரீகர்த்தும் குசலமகிலம்
ஜேதுமாதீநராதீந்
தூரி கர்த்தும் துரித நிவஹம்
த்யக்துமாத்யாம் அவித்யாம்,
அம்ப ஸ்தம்பாவதிக ஜநந
க்ராம ஸீமாந்தரேகாம்
ஆலம்பந்தே விமல மநஸோ
விஷ்ணுகாந்தே தயாம் தே. (18)

மாசறு மனத்தர்கொள்ள உள்ளுமங் கலங்கள்மன்னப்
பாசமும் கழறமுற்றும் பாறுபா ருகப்பாவம்
வாசனை யவிச்சையோடே யோடவே பிறவிப்பன்மை
யோசனை கடத்தவல்ல உன்னருள் பற்றுவாரே. (18)

[**அம்ப!** - தாயே!; **விஷ்ணுகாந்தே!** - விஷ்ணுவுக்குப் பிரியமுள்ள பத்நியே!; **விமலமநஸ:** - அகங்காரமமகாரம் முதலான அழுக்கற்ற பரிசுத்தமான மனத்தையுடையவர்கள்; **அகிலம் குசலம்** - எல்லா நன்மைகளையும்; **ஊரீகர்த்தும்** - அடைவதற்கும்; **ஆதீந் அராதீந்** - அநாதி நித்யசத்துருக்களான காமக்ரோத லோபமோஹ மதமாத்ஸர்யங்களை; **ஜேதும்** - ஜயிப்பதற்கும்; **துரித நிவஹம்** - மோக்ஷவிரோதியான பாபத்திரளை; **தூரீகர்த்தும்** - விலக்குவதற்கும்; **ஆத்யாம் அவித்யாம்** - அநாதியான மூலப்ரக்ருதியை; **த்யக்தும்** - விடுவதற்கும்; **ஸ்தம்ப அவதிக** - ஸ்தம்பம் என்கிற புழுவரையிலுள்ள; **ஜநந க்ராம ஸீமாந்தரேகாம்** - பிறவியாகிற ஊர் எல்லைக்கு அப்புறம் காட்டும் ஒற்றைவழிபோன்ற; **தே தயாம்** - தேவரீருடைய கருணையை; **ஆலம் பந்தே** - உபாயமாகப் பற்றுகிறுர்கள்.

தாயே! லக்ஷ்மீ! அகில நன்மைகளையும் அடையவும், ஆதிகாலந்தொட்டுத் தொடர்ந்துவருகிற அநிஷ்ட்டவர்க்கங்களை அடக்கவும், எல்லாப்பாபங்களையும் போக்கவும், அநாதியான

அவித்யையை அகற்றவும், பரிசுத்தமான மனத்தை உடைய வர்கள் பிரமன் முதல் புழுவரையிலாக உள்ள பிறவிகளுக்கு எல்லையாகிய தேவரீருடைய தயையைக் கதியாகப் பற்றுகிறார்கள்.]

ஜாதா காங்க்ஷா ஜநநி யுவயோ:
ஏக ஸேவாதி காரே
மாயாலீடம் விபவமகிலம்
மந்யமாநாஸ் த்ருணய,
ப்ரீத்யை விஷ்ணோஸ் தவ ச க்ருதிந:
ப்ரீதிமந்தோ பஜந்தே
வேலா பங்க ப்ரசமந பலம்
வைதிகம் தர்ம ஸேதும். (19)

அன்னையே யுங்கட்கேயாம் தொண்டதே கண்டவாவிப்
புன்மையா மாயைமூளும் பொருளெலாம் புறக்கணித்தே
நன்மையா நும்பாலன்பே நாடிநான் மறைவகுக்கும்
பொன்னடிக் கடவா துங்கள் பேரருள் பெறுவார்போற்றி. (19)

[ஜநநி ! - தாயே ! ; யுவயோ: - தேவரீர்கள் இருவருடைய ; ஏகஸேவாதிகாரே - சேர்த்தியில் ஸேவித்துக் கொள்ளுகையில் ; **ஜாதா காங்க்ஷா** - விருப்பம் உடையவர் ; **மாயா லீடம்** - பகவானுடைய மாயையால் மொய்த்த ; **அகிலம் விபவம்** - ஸகல ஐசுவரியத்தையும் ; **த்ருணாய** - புல்லுக்கொப்பாக, அற்பமாக ; **மந்யமாநா:** - நினைத்தவரான ; **க்ருதிந:** - பாக்கியசாலிகள், புண்ணியவான்கள், பிரபந்நர்கள் ; **தவ விஷ்ணோச்ச** - தேவரீருடையவும் பெருமாளுடையவும் ; **ப்ரீத்யை** - உவப்பின் பொருட்டு ; **வைதிகம்** - வேதங்களில் விதிக்கப்பெற்ற ; **தர்ம ஸேதும்** - ஸம்யாசாரமாகிற அணையை ; **வேலாபங்க ப்ரசமநபலம்** - எல்லை கடத்தலில்லாமையையே பலமாக ; **பஜந்தே** - அடைகிறார்கள்.

பெருமாள் பிராட்டியாகிய திவ்யதம்பதிகள் இருவருடைய சேர்த்தியிலும் கைங்கர்யம் செய்ய விரும்பிய பாக்கியசாலிகள் மாயையினால் வியாபிக்கப்பட்ட கைவல்யம் வரையில் உள்ள எல்லா ஐசுவரியங்களையும் அற்பமாக மதித்து அவர்களுடைய பிரீதிக்காக மாத்திரமே வைதிககர்மாக்களைச் செய்கிறார்கள்.]

ஸேவே தேவி த்ரிதச மஹிளா
மௌளி மாலார்ச்சிதம் தே
ஸித்தி க்ஷேத்ரம் சமித விபதாம்
ஸம்பதாம் பாத பத்மம்,
யஸ்மிந்நீஷந் நமித சிரஸோ
யாபயித்வா சரீரம்
வர்த்திஷ்யந்தே விதமஸி பதே
வாஸுதேவஸ்ய தந்யா:. (20)

தேவரார் மாதர்கோதை மண்டியே தொண்டுசெய்யும்
தீவினை தவிர்க்கும் செல்வம் மல்குமுன் தாளிணைக்கே
ஆவிதந் தடிமைகொண்டேன் அடிமையிவ் வாறுகொண்டார்
மாவுனக் குரியமாயோன் மாபதம் புகுந்துமீளார். (20)

[தேவீ ! - தாயே ! ; **த்ரிதச மஹிளா** - தேவஸ்திரீகளுடைய ; **மௌளி மாலா** - மயிர்முடியில் அணிந்த பூமாலைகளால் ; **அர்ச்சிதம்** - அருச்சனை செய்யப்பெற்றதும், **சமிதவிபதாம்** ; ஆபத்துக்கலசாததான ; **ஸம்பதாம்** - ஐச்வர்யங்களுக்கு ; **ஸித்தி க்ஷேத்ரம்** - இருப்பிடமுமான ; **தே பாதபத்மம்** - தேவரீரது திருவடித்தாமரையை ; **ஸேவே** - வணங்குகின்றேன் ; **யஸ்மிந்** - எந்தத்திருவடிகளில் ; **ஈஷந் நமித சிரஸ:** - கொஞ்சம் தலை வணங்கினவர், சரணுகதர்; **தந்யா:** - கிருதக்ருதீயரானுர்; **சரீரம்** - கர்மாநுகுணமான சரீரத்தை ; **யாபயித்வா** - கழித்துவிட்டு ; **வாஸுதேவஸ்ய** - பரவாஸுதேவனுடைய ; **விதமஸிபதே** - ப்ரக்ருதிஸம்பந்த மற்றதான ஸ்தாநத்தில், அழுக்கற்ற இடத்தில், மோக்ஷத்தில், பரமபதத்தில் ; **வர்த்திஷ்யந்தே** - வசிப்பர், இருப்பர், நித்யவாஸம் பண்ணுகிருர்கள்.

தாயே! தேவஸ்திரீகளின் சிரஸ்ஸில் வைத்துக்கொள்ளப் பெற்ற புஷ்பங்களினுல் அர்ச்சிக்கப்பெற்றதும், ஆபத்தில்லாத ஸம்பத்தைக் கொடுப்பதுமான தேவரீர் திருவடிகளில் மோக்ஷார்த்தமாகச் சரணுகதி பண்ணி க்ருதக்ருத்யரான பிரபந்நர், இருந்த நாளில் கர்மாதீநமாகிற பயன்களை அநுபவித்துக் குறிப்பிட்ட நாளில் சரீரத்தைவிட்டு, அர்ச்சிராதிகதியால் ப்ரக்ருதியை நீக்கி, அப்ராக்ருதமான பரமபதத்தில் பரமபத நாதனுடைய கைங்கர்ய

83163
O22:4|7
N52

ஸாம்ராஜ்யம் அடைந்து வாழ்வர். தேவரீர் திருவடிகளில் சிரஸ்ஸைச் சிறிது வணங்கியவனும் தமோகுண மற்ற மோக்ஷத்தில் வஸிப்பான்.]

ஸாநுப்ராஸ ப்ரகடித தயை:
ஸாந்த்ர வாத்ஸல்ய திக்தை:
அம்ப ஸ்நிக்தைரம்ருத லஹரீ
லப்த ஸப்ரும்மசர்யை:,
கர்மே தாபத்ரய விரசிதே
காட தப்தம் க்ஷணம் மாம்
ஆகிஞ்சந்ய க்லபித மநகை:
ஆர்த்ர யேதா: கடாக்ஷை:. (21)

துளக்கமில் விளக்கமேறுந் திருவருள் சுரக்கும்பெற்றி
கொளக்குறை வில்லாவள்ளற் குணமெனு மணியின் கோப்பு
வளர்க்குண வளப்பமேயா முன்னரு ளமுதநோக்கே
களக்கதி கொதித்துவேகும் கதியிலா வென்னைக்காக்கும். (21)

[அம்ப ! - தாயே ! ; ஸாநுப்ராஸ - அடிக்கடி, தொடர்ந்திருக்கும்படி இடை விடாமல் ; ப்ரகடித தயை: - வெளிக்காட்டாநின்ற, பகிரங்கமாகக் காட்டப்பட்ட, பிரகாசம் செய்யப்பெற்ற தயையை உடையவரும் ; ஸாந்த்ர வாத்ஸல்ய - அதிகமான அன்பினால் ; திக்தை: - நெருங்கினதும், பூசப்பெற்றதும் ; அநகை:-எக்காலத்திலும் உபேக்ஷை முதலான குற்றம் அற்றதும்; ஸ்நிக்தை: - இடைவிடாமல் ஸ்நேகம் உள்ளதும் ; அம்ருதலஹரீ- அமிருதமயமான அலைகளோடு; லப்த-அடையப்பெற்ற;ஸப்ரும்மச்ர்யை: - நிகரானதும் (அமிருதப் பெருக்குக்குச்சமானமானதும்) ஆன ; க்ஷணம் - கொஞ்சம் ; கடாக்ஷை: - கடைக்கண் பார்வைகளினால் ; தாபத்ரய - மூன்று வித தாபங்களினால் ; விரசித - உண்டான ; கர்மே - வெய்யிலில் ; காட தப்தம் - நன்றாகத் தபிக்கப்பெற்ற ; ஆகிஞ்சந்ய - வேறு உபாயம் இல்லாமையால் ; க்லபிதம் - வாடிப்போன ; மாம் - அடியேனை ; ஆர்த்ரயேதா: - குளிரச் செய்ய வேணும்.

அன்னையே ! ஒரேதாரையாகப் பொழிகின்ற அருளினாலே பூசப்பெற்ற அமிருதமயமான அலைகள் வீசும் தேவரீரது

கடாக்ஷங்களினுல் முவ்விதத்தாபத்திரயங்களில் அகப்பட்டு வெந்துகிடக்கிற அடியேனைக் குளிரும்படி செய்து ஆதரிக்கக் கடவீர்.]

ஸம்பத்யந்தே பவபயதமீ
பாநவ: த்வத் ப்ரஸாதாத்
பாவா: ஸர்வே பகவதி ஹரௌ
பக்தி முத்வேலயந்த:,
யாசே கிம் த்வாம் அஹமிஹயத:
சீதளோ தாரசீலாம்
பூயோ பூயோ திசஸி மஹதாம்
மங்களா நாம் ப்ரபந்தாந். (22)

பயமெனு மிரவினுக்கோ ரிரவியாம் பரமனுர்பால்
மயர்வறும் பத்திவெள்ளம் கரைபுரண் டோடப்பண்ணும்
தயையெனு மொன்றுகொண்டே திருவெனும் தகைமைதோன்ற
உயர்நலம் மல்கநல்கும் தாயுனை யென்தாவென்பேன். (22)

[பவபய - ஸம்ஸாரபீதியாகிற ; தமீ பாநவ: - (திரண்ட இருளுக்கு) இரவுக்கு சூரியன் போன்றனவும் ; த்வத் ப்ரஸாதாத்- தேவரீருடைய அநுக்ரஹத்தால் ; பகவதி ஹரௌ - ஞானம், சக்தி, பலம், ஐசுவரியம், வீரியம், தேஜஸ்ஸு என்ற ஆறு குணங்கள் நிறைந்த ஸ்ரீமந்நாராயணனிடத்தில் ; பக்திம் - பக்திக் ஞானங்களை ; உத்வேலயந்த: - கரைபுரளச் செய்யுமவையான ; ஸர்வே பாவா: - எல்லா வேண்டற்பாடும், அகில மநோபாவங் களும், எல்லா எண்ணங்களும் ; ஸம்பத்யந்தே - பெருகா நின்றன, உண்டாகின்றன ; இஹ - இங்கு இப்படிச் சிந்திக்கும் பொழுது ; அஹம் - அடியேன் ; சீதள உதார சீலாம் - குளிர்ந்த தும் உயர்ந்ததுமான ஸ்வபாவத்தையுடைய ; த்வாம் - தேவரீரை; கிம் யாசே - எதை யாசிப்பேன் ? ; யத: - ஏனெனில், யாதொரு காரணத்தினுல் ; மஹதாம் மங்களாநாம் - மிக்க க்ஷேமங் களுடைய ; ப்ரபந்தாந் - வரிசைகளை ; பூயோ பூய: - அடிக்கடி ; திசஸி - கொடுக்கிறீர் அல்லவா ?

தேவரீருடைய கிருபையினுல் அடியேனது எண்ணங்க ளெல்லாம் பகவான்மீது பக்தியை விருத்தி செய்துகொண்டு

ஸம்ஸாரமாகிய காரிருளுக்குச் சூரியனுக இருக்கின்றன. அவ்வள வோடு நிற்காமல் மேன்மேலும் அளவற்ற மங்களங்களைத் தேவரீரே அளித்துக் கொண்டிருக்கையில் அடியேனுடைய தீவினையினுல் மிகவும் பயத்தோடு கூடிய யான் தேவரீரைப் பிரார்த்திக்க வேண்டியது யாது உளது?]

மாதா தேவி த்வமஸி பகவாந்
வாஸுதேவ: பிதா மே
ஜாதஸ் ஸோஹம் ஜநநி யுவயோ:
ஏகலக்ஷ்யம் தயாயா:,
தத்தோ யுஷ்மத் பரிஜநதயா
தேசிகைரப் யதஸ்த்வம்
கிம் தே பூய: ப்ரியமிதி கில
ஸ்மேர வக்த்ரா விபாஸி. (23)

நீயேயென தன்னைத்திரு நாராயண னத்தன்
மெய்யேயெனை யீன்றீர்விழி பொய்யாதருள் பெய்தீர்
மெய்யாரியர் தந்தாரெனை நும்பேரடி யானென்
றய்யாவினி யென்னுமென வம்மாமகிழ் கின்ருய். (23)

[தேவி! - தேவியே!; த்வம் - தேவரீர்; மே - அடியேனுக்கு; மாதா அஸி - தாயாக ஆகிறீர்; பகவாந் வாஸுதேவ: - பகவானுகிய பெருமாள்; பிதா - தகப்பன் ஆகிருர்; ஜநநி! - தாயே!; ஸ: அஹம் - அப்படிப்பட்ட அடியேன்; யுவயோ: - தேவரீர்கள் இருவருடைய; தயாயா: - திருவருளுக்கு; ஏகலக்ஷ்ய: - முக்கிய குறிப்பாக; ஜாத: - ஆகிவிட்டேன்; யுஷ்மத் பரிஜநதயா - தேவ ரீர்கள் கிங்கரன் ஆகுகைக்கு; தேசிகை: - ஆசார்யர்களால்; தத்த: - பரஸமர்ப்பணம் பண்ணப்பட்டேன்; தே - தேவரீருக்கு; பூய: - பின்னும்; கிம் ப்ரியம் - என்ன ஆசை; இதிகில - என்று சொல்வதுபோல; ஸ்மேர வக்த்ரா - மலர்ந்த முகம் உடையவளாய்; விபாஸி - விளங்குகிறீர்.

அன்னையே! தேவரீர் அடியேனுக்கு மாதா; பகவான் பிதா; அடியேன் தேவரீர்கள் இருவருடைய தயைக்கும் முக்கியமான பாத்திரமாய் இருக்கிறேன். ஆசார்யர்கள் அடியேனைத் தேவரீர்களுக்கு அடிமையாக்கிவிட்டார்கள். இப்படியிருக்க இதற்குமேல்

என்ன பிரியம் இருக்கிறது அடியேனுக்கு என்று புன்னகையுடன் இருக்கின்றீர்.]

கல்யாணநாமவிகல நிதி:
காபி காருண்ய ஸீமா
நித்யாமோதா நிகம வசஸாம்
மௌளி மந்தார மாலா,
ஸம்பத் திவ்யா மது விஜயிந:
ஸந்நிதத்தாம் ஸதா மே
ஸைஷா தேவீ ஸகல புவந
ப்ரார்த்தநா காமதேநு:. (24)

தருமங்கல தருமந்தரு திருவாமொரு தயையாய்த்
திருமாமறை யெழுமாமுடி தருமாபத மலராள்
திருவாயரி விரிமார்வுறை யொருமாவிறை யளியோள்
வருவாளென தியத்தரு ளுதயத்திரு வொளியாய். (24)

[கல்யாணநாம் - மங்களங்களுக்கு; அவிகல நிதி:- நாசமுறுநிதியும்; காபி - வாசாமகோசர மஹிமையுடையவும்; காருண்ய ஸீமா - தயைக்கு எல்லை நிலமாயும்; நித்யாமோதா - நிலைநின்ற ஆநந்தம் உடையவும்; நிகம வசஸாம் - வேதவாக்குக்களுடைய; மௌளி மந்தார மாலாம் - சிரஸ்ஸுக்குக் கற்பகப் பூமாலை போன்றவும்; மதுவிஜயிந:- மது என்னும் அசுரனை ஜயித்த பகவானுக்கு; திவ்யாஸம்பத் - கலங்காப்பொருளாயும்; ஸகல புவநப்ரார்த்தநா காமதேநு:- எல்லா ஜனங்களுடைய எல்லா வேண்டுதலையும் அளிப்பதில் காமதேநு போன்றவும்; ஸைஷா தேவி - அப்படிப்பட்ட இந்த ஸ்ரீதேவி; மே - அடியேன் பொருட்டு, அடியேனுடைய மனத்தில்; ஸதா - எப்பொழுதும்; ஸந்நிதத்தாம் - நித்யவாசம் பண்ணக் கடவள்.

மங்களங்களுக்கெல்லாம் நாசமில்லாத இருப்பிடமாயும், வாக்குக்கு எட்டாதவளும், தயைக்கு எல்லை நிலமாயும், வேதங்களுக்குச் சிரோபூஷணமாயும், பகவானுக்குத் திருவாயும், ஜனங்களுடைய எல்லா அபீஷ்டங்களையும் கொடுக்கும் காமதேநுவைப் போன்றவளாயும் இருக்கிற லக்ஷ்மீ அடியேனுக்கு எப்பொழுதும் ஸாந்நித்யம் செய்யவேண்டும்.]

83163

உபசித குருபக்தே:
உத்திதம் வேங்கடேசாத்
கலி கலுஷ நிவ்ருத்யை
கல்பமாநம் ப்ரஜாநாம்,
ஸரஸிஜ நிலயாயா:
ஸ்தோத்ரமேதத் படந்த:
ஸகல குசல ஸீமா
ஸார்வ பௌமா பவந்தி. (25)

பெருகிய குருக்கணற்றுட் பத்தியின் சித்திபூக்கும்
ஒருவனும் வேங்கடேசன் உலகெலாம் கலிதவிர்க்கத்
தருமிதோர் திருவின்பாடல் தேறிய மனத்தரோத
இருநிலம் கொழிக்கும்செல்வத் திருநலம் பெருகிவாழ்வார். (25)

[உபசித - விருத்தி செய்யப்பெற்ற ; குருபக்தே - ஆசார்ய பக்தியையுடைய ; வேங்கடேசாத் - வேங்கடேசன் என்னும் திரு நாமத்தையுடைய அடியேனிடமிருந்து ; உத்திதம் - ஸ்ரீ ஸங்கல் பத்தால் வெளிப்புறப்பட நின்றவும் ; ப்ரஜாநாம் - ஸகல ப்ராணிகளுடைய ; கலி கலுஷ நிவ்ருத்யை: - கலி காலத்தால் உண்டாகும் தீமைகளைப் போக்கும் பொருட்டு, வினை விலக்கு தலில் ; கல்பமாநம் - நற்திறமையுடையவுமான ; ஸரஸிஜ நிலயாயாம் - தாமரை மலரில் நித்யவாஸம் செய்யும் அலர்மேல் மங்கையாம் ஸ்ரீதேவியினுடைய ; ஏதத் ஸ்தோத்ரம் - இந்த ஸ்தோத்ரத்தை ; படந்த: - படிப்பவர், சொல்லுபவர், குருமுக மாக ஸார்த்தமாகக் கேட்டு அநுஸந்திக்குமவர், கிளிபோற் சொல்லுமவர் ; ஸகலகுசலஸீமா - எல்லா மங்களங்களுக்கும் எல்லை நிலங்களாகவும், ஸகலவிதமான க்ஷேமங்கள் என்னும் எல்லை வாய்ந்த மண்டல முழுமைக்கும் ; ஸார்வபௌமா - சக்ர வர்த்திகளாகவும் ஆகின்றார்கள்.

குருபக்தியிற் சிறந்த ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகனால் ஜனங்களுக்கு உண்டான கலியின் கொடுமையைப் போக்கத் தக்கதென்று சொல்லப்பெற்ற இந்த ஸ்ரீஸ்துதியைச் சொல்லுகிற வர்கள் ஸகல மங்கலங்களையும் தங்கள் இஷ்டப்படி ஆட்சி செய்யத் தக்கவராவார்கள்.]

6A / 2-71